பக்கங்கள் 12
விலை ரூ. 50
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 38
கதிர் : 192
செவ்வாய்க்கிழமை 06 ஜூன் 2023
வைகாசி 23 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## கைக்குண்டுடன் ஒருவர் கைது

யாழ்., ஜூன் 6
கொழும்புத்துறையில் கைக்குண்டுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கைதான நபர் நேற்றுமுன்தினம் இரவு தனது வீட்டில் பெரிய »11

## இளவாலையில் ஆண்டவர் சொரூபம் விஷமிகளால் சேதம்

யாழ்., ஜூன் 6
இளவாலை, மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயத்தில் அமைக்கப்பட்டிருந்த கல்லறை ஆண்டவரின் திருச்சொரூபமும் அதனைச் சூழ அமைக்கப்பட்டிருந்த கட்ட »11

### உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வைக்கு

# அரசியல் பிரதிநிதி நியமனத்துக்கு தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்ப்பு

**கொழும்பு, ஜூன் 6**
**உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வைக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் பிரதிநிதியை நியமிக்கும் தீர்மானத்தில் உடன்பாடு இல்லை எனத் தேசியத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.** »11

## புதையல் தோண்ட முற்பட்ட சிப்பாய் உட்பட 8 பேர் கைது

முல்லைத்தீவு, ஜூன் 6
மதவாளசிங்கன்குளம் காட்டுப்பகுதியிலுள்ள நாகஞ்சோலையில் புதையல் தோண்ட முற்பட்ட 8 பேரை சிறப்பு அதிரடிப்படையினர் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.
அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய அந்தப் பகுதிக்குச் சென்று 8 பேரை »11



### அரச பணியாளர்களின்

## 5 ஆண்டு விடுமுறை மீள்பரிசீலனையில்

கொழும்பு, ஜூன் 6
அரச பணியாளர்களுக்கு, ஐந்தாண்டு விடுமுறையில் வெளிநாட்டில் பணியாற்ற வாய்ப்பளிக்கும் தீர்மானத்தை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வாய்ப்புள்ளதாக சுற்றாடல் அமைச்சின் செயலர் மருத்துவர் அனில் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.
அந்நியச் செலாவணி நெருக்கடி உச்சக்கட்டத்தில் இருந்தபோது, அரச ஊழியர்களுக்கு »11

### மருதங்கேணி விவகாரம்;

## மக்கள் முன்னணியினரை பழிவாங்கும் பொலிஸார்

### இருவர் கைது; கஜேந்திரகுமார் குற்றவாளியாக பெயரிடப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜூன் 6
அரச புலனாய்வாளர்களாலும், பொலிஸாராலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கு மருதங்கேணியில் வைத்து அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் தொடர்பில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு உறுப்பினர்கள் நேற்றுக் »11

## வல்வெட்டித்துறையில் கேணியில் மூழ்கி இளைஞர் சாவு!


யாழ்., ஜூன் 6
வல்வெட்டித்துறை, கம்பர்மலை ஆலயக் கேணியில் குளித்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மட்டக்களப்பைச் சேர்ந்த ஜெகன் ஜெனோசாந் »11

### மாவட்ட நீதிபதி பிரபாகரன்

## மேல் நீதிமன்ற நீதிபதியானார்!

கொழும்பு, ஜூன் 6
வவுனியா மாவட்ட நீதிபதி தி.யோ.பிரபாகரனுக்கு மேல் நீதிமன்ற நீதிபதிப் பதவி வழங்கப்பட்டுள்ளது. நீதிச் சேவை ஆணைக்குழுவின் பரிந்துரையில் நான்கு பேருக்கு மேல் நீதிமன்ற நீதிபதி நியமனத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க வழங்கியுள்ளார்.
வவுனியா மாவட்ட நீதிபதி தி.யோ.பிரபாகரனுக்கும் மேல் நீதிமன்ற நீதிபதி நியமனம் »11

## வற்றாப்பளை அம்மன் பொங்கல்; லட்சக்கணக்கானோர் பங்கேற்பு



முல்லைத்தீவு, ஜூன் 6
வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் லட்சக்கணக்கான பக்தர்களின் பங்கேற்புடன் நேற்று நடைபெற்றது.
முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலய பொங்கல் நிகழ்வு நேற்று அதிகாலை நிறைவடைந்ததும் அங்கிருந்து மடப்பண்டம் எடுத்துவரப்பட்டு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது »11

## வற்றாப்பளை பொங்கலில் 17 நகை திருட்டுக்கள்

முல்லைத்தீவு, ஜூன் 6
வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தில் நேற்று பகல் மாத்திரம் 17 நகை திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
இலட்சக்கணக்கான பக்தர்கள் பொங்கலில் பங்கேற்றிருந்தனர். சன நெருக்கத்தை தமக்குச் சாதகமாக்கிய திருடர்கள், நகைகள் »11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தில் முட்டை உற்பத்தி மந்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

**வடமாகாணத்தில் முட்டை உற்பத்தி மந்த நிலையில் காணப்படுவதாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி வசீகரன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்ற விவசாயத்துறை அமைச்சின் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாணத்தில் முட்டைகளுக்கான தேவைகள் அதிகமாக காணப்படுகின்றன.

எனினும், அவற்றை உற்பத்தி செய்வதற்கான பண்ணையாளர்கள் வடமாகாணத்தில் இல்லை. வடமாகாணத்துக்கு தேவையான முட்டைகளை வெளிமாகாணங்களில் இருந்தே இறக்குமதி செய்யவேண்டிய நிலை காணப்படுகின்றது.

குறைந்த விலையில் உடலுக்குத் தேவையான புரோட்டீன் முட்டையில் இருந்தே கிடைக்கின்றது.

ஆனால் அவ்வாறு புரோட்டீன் கிடைக்கும் முட்டைகளை உற்பத்தி செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

எமது திணைக்களத்தினால் இரண்டு இடங்களில் வாரத்துக்கு 15 ஆயிரம் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படுகின்றபோதும், அவற்றை நுகர்வதற்கான கேள்வி குறைவாகவே உள்ளது.

கோழித் தீவனத்துக்கான முக்கியமான உள்ளீடான சோளத்தின் விலையதிகரிப்பின் காரணத்தால் தீவனங்களுக்குத் தட்டுப்பாடு காணப்படுவதுடன் இதன் காரணமாக கோழிவளர்ப்போரின் எண்ணிக்கை குறைந்து காணப்படுகின்றது.

முட்டைகளை இறக்குமதி செய்வதைக் குறைத்து, தீவனங்களை இறக்குமதி செய்வதன் மூலமாக உள்ளூர் கோழிப் பண்ணையாளர்களை ஊக்குவிக்க முடியும் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டச் செயலர், யாழ் மாவட்டச் செயலர், வவுனியா மாவட்டச் செயலர், முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலர், கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலர், வடமாகான விவசாய அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம-113)



## மன்னாரில் வாகன விபத்து; பொலிஸ் அதிகாரி காயம்!

மன்னார், ஜூன் 6

மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பயணித்த வாகனம், மன்னார் பறவைகள் சரணாலயத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானது.

மன்னார் தள்ளாடிக்கும் பெரிய பாலத்துக்கும் இடையில் பறவைகள் சரணாலயப் பகுதியிலேயே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட மூவர் விபத்தில் காயமடைந்தனர். அவர்கள் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-ரி2-213)

## விபத்தில் இருவர் காயம்!

சாவகச்சேரி, ஜூன் 6

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார்சைக்கிள் அதே வீதியால் சென்ற சைக்கிளை மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும், சைக்கிளில் பயணித்தவரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நாவற்குழியில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றது.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-9)

## வெடிக்காத நிலையில் மூன்று குண்டுகள் மீட்பு!

கிளிநொச்சி, ஜூன் 6



தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்நாறு பகுதியில், கடந்த சனிக்கிழமை வெடிக்காத நிலையில் மூன்று குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தக் குண்டுகள் சிறப்பு அதிரடிப்படையால் மீட்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் செயலிழக்கச் செய்யப்பட்டன. (ய-316)

## எதிர்வரும் 10ஆம் திகதி கவுணாவத்தை வேள்வி

யாழ்ப்பாணம், ஜூன் 6

கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த மரபுவழி வேள்விப் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

வேள்விப் பொங்கல் தினத்தன்று வழமைபோன்று ஆட்டுக்கடாக்கள், சேவல்கள் காணிக்கையாக்கப்பட்டு நேர்த்திகள் நிறைவேற்றப்படுவதுடன் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக வேள்வி உற்சவம் இடம்பெறுமென மேற்படி ஆலயத் தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (ய-66)



## 'சோலரில்' இயங்கும் படகு வெள்ளோட்டம் வெற்றி!

யாழ்ப்பாணம், ஜூன் 6

சூரிய மின்னாற்றலில் (சோலர்) இயங்கும் இயந்திரப் படகு வல்வெட்டித்துறைக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டுள்ளது.

சூரிய சக்தியிலிருந்து 13 குதிரைவலு இயந்திரத்தைக் கொண்டு இயங்கும் மீன்பிடிப்படகே இவ்வாறு சோதிக்கப்பட்டுள்ளது. இந்த சூரியசக்தி இயந்திரங்கள் அரசாங்கத்தால் வழங்கப்படும் பட்சத்தில், மீன்பிடித்துறையில் பெருமளவு எரிபொருளை மீதப்படுத்தமுடியும் என்று மீனவர்கள் தெரிவித்தனர். (ம-26-66)

## சிவகுமாரனுக்கு உரும்பிராயில் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், ஜூன் 6

தியாகி பொன்.சிவகுமாரனின் 49ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு உரும்பிராயில் உள்ள சிவகுமாரின் உருவச்சிலை முன்பாக நேற்று இடம்பெற்றது.

மேற்படி நினைவேந்தல் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சேனாதிராசா, தமிழ்த்தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் பொதுச் செயலாளர் அனந்தி சசிதரன், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், பா.கஜதீபன், யாழ்.மாநகரசபையின் முன்னாள் பிரதி முதல்வர் து.ஈசன், நினைவேந்தல் குழுவினர், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம-20-66)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேர்தலை நடத்தாது ஜனாதிபதியால் மக்களாணையை மதிப்பிடமுடியாது

## ஜே.வி.பி. கூறுகின்றது



**கொழும்பு, ஜூன் 6**

**தேர்தலை நடத்தாமல் எந்த அரசியல் கட்சியாலும் 50 சதவீதமான பலத்தைப் பெற முடியாது என ஜனாதிபதியால் எவ்வாறு தெரிவிக்க முடியும்? தேர்தலை நடத்தாமல் மக்களாணையை மதிப்பிடமுடியாது. தேர்தலை நடத்தினால் நாட்டு மக்கள் நிச்சயம் பதிலடி கொடுப்பார்கள் இவ்வாறு ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முறையற்ற வகையில் பிற்போடப்பட்டுள்ளமைக்கு எதிராக எதிர்வரும் வாரம் உயர்நீதிமன்றத்தில் பிறிதொரு அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றை தாக்கல் செய்வோம். நிதி நெருக்கடி காரணமாக உள்ளூராட்சிமன்றத்தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது என அரசாங்கம் குறிப்பிடுவது அடிப்படையற்றதாகும். உள்ளூராட்சிமன்றத்தேர்தல் தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடாகப் பல விடயங்களை பெற்றுக்கொண்டுள்ளோம்.

உள்ளூராட்சிமன்றத்தேர்தல் வாக்கெடுப்பைக் கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்தது. தேர்தல் நடவடிக்கைகளுக்கு 246 கோடி ரூபா தேவை என தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த மார்ச் மாதம் ஏழாம் திகதி திறைசேரியின் செயலாளரிடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன 'நிதி விடுவிப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கையை விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அறிவுறுத்தியுள்ளேன். சாதகமான பதில் கிடைத்ததும் தேவையான நிதி விடுவிக்கப்படும்' என மார்ச் ஏழாம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளார்.

வாக்கெடுப்புக்குத் தேவையான நிதியை தேர்தல்கள் ஆணைக்குழு ஒரே கட்டமாகக் கோரவில்லை. கட்டம் கட்டமாகவே கோரியுள்ளது. இவ்வாறான பின்னணியில் தேர்தல் நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியை விடுவிக்க அரச வருமானம் போதுமானதாக இல்லை, கையிருப்பில் ரூபா இல்லை என நிதியமைச்சு குறிப்பிட்ட கருத்தை தகவலறியும் உரிமைச் சட்டம் பொய்யாக்கியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 17 ஆயிரத்து 790 கோடி ரூபா வருமானத்தை நிதியமைச்சு ஈட்டியுள்ளது. அரச செலவுகளுக்காக 15 ஆயிரத்து 676 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன். 2 ஆயிரத்து 141 கோடி ரூபா சேமிக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி மாதம் 27 ஆயிரத்து 175 கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளது. 20 ஆயிரத்து 862 கோடி ரூபா அரச செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டு 6 ஆயிரத்து 313 கோடி ரூபா சேமிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் அரச செலவுகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டதன் பின்னர் 8 ஆயிரத்து 427 கோடி ரூபா மிகுதியாகியுள்ளது. மார்ச் மாதம் 25 ஆம் திகதி உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு 246 கோடி ரூபாவை மாத்திரம் கோரியுள்ளது. பொய்யான காரணிகளைக் குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட்டுள்ளது. அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் வாரம் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம் - என்றார்.

(எ-இ)

## முன்னாள் அரசியல் கைதிக்கு ரி.ஐ.டி. விசாரணைக்கு அழைப்பு

**வவுனியா, ஜூன் 6**

வவுனியாவைச் சேர்ந்த முன்னாள் அரசியல் கைதி ஒருவரை ரி.ஐ.டி. விசாரணைப் பிரிவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் வசித்துவரும் முன்னாள் அரசியல் கைதி ஒருவரை பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வருமாறு, பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் (ரி.ஐ.டி.) நேற்று அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது. வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் முன்னாள் அரசியல்கைதியான செல்வநாயகம் ஆனந்தவர்ணன் என்பவரையே நாளை காலை 9 மணிக்கு, வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாத விசாரணை மற்றும் தடுப்புப் பிரிவுக்கு சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-18)



## சீரமைக்கப்படாத வீதிகளால் சிரமத்துக்குள் பொதுமக்கள்

மன்னார் நகர்ப் பகுதியில், எழுத்தூர் தரவன் கோட்டை வீதி நீண்டகாலமாக சீரமைப்புச் செய்யப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. இந்த வீதியை விரைந்து சீரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் பொதுமக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் டிப்போ வீதி, தாழ்வுப்பாடு போன்ற வீதிகள் நீண்டகாலமாக சீரமைப்புச் செய்யப்படாமல் உள்ளன. அந்தப் பகுதியால் போக்குவரத்துச் செய்வதற்குப் பல்வேறு சிரமங்களை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை தெரியப்படுத்தியும் உரிய தீர்வு கிடைக்கவில்லை. அதிகாரிகள் இனியாவது இந்த வீதியின் சீரமைப்பில் கவனமெடுத்துச் செயற்படவேண்டும் - என்றனர்.

(ம-213)




படிப்பிருக்கிற இடத்தில பண்பிருக்குமெண்டு முந்திக் காலத்தில சொல்லுவினம். ஆனால் இப்ப அதெல்லாம் மலையேறிப் போட்டுது. எங்கட யாழ்ப்பாணக் கம்பஸில அடிபாடுகள் தொடங்கிட்டுது. எல்லாப் பீடங்களும் தங்கட திறமையளை வெளியில கொண்டுவாறதுக்காக 'ஆர்ட்ஸ் வீக்', 'மாகோஸ் வீக்', சயன்ஸ் வீக் எண்டு ஒவ்வொரு பெயரில ஒரு கிழமைக்கு விளையாட்டுப்போட்டியள், கலைப்போட்டியள் எல்லாம் வைக்கிறவ. உண்மையில நல்ல செயற்பாடு. ஆனால் நல்லது நடக்கிறதைக் குழப்பிறதுதானே எங்கட வேலை. கொரோனா, பொருளாதார நெருக்கடி அது இதெண்டு நாலு வருசமா இந்த நிகழ்ச்சியள் நடக்காமல், இந்தவருசம் தான் நடக்குது. அதில மனேஜ்மெண்ட் படிக்கிற ஆக்கள் நடத்தின 'மாகோஸ் வீக்கில' தான் இந்தக் குழப்பங்கள். வழக்கமா சீனியர்ஸ்தான் ஜூனியர்ஸுக்கு கைவைப்பினம். ஆனால் இஞ்ச அது தலைகீழ். இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டில படிக்கிறவைதான் கடும் துள்ளல். இரண்டாம் வருடத்தில 2 பட்ஜ் இருக்கு. ஒண்டு முதலாம் அரையாண்டு, மற்றது இரண்டாம் அரையாண்டு. இதில இரண்டாம் அரையாண்டுக்காரரிலதான் சிலர் பிரச்சினைக்கெண்டே நேர்ந்துவிட்ட மாதிரி நடக்கிற ஆக்கள். அதுக்குக்காரணம், அவைதான் அங்க பெரும்பான்மை. தங்கட 'பட்ஜ்' ல ஆக்கள் கூட எண்ட துணிவில கண்டதுக்கெல்லாம் சண்டைக்குப் போறதெண்டது அந்த 'ரூ பொய்ண்ட் ரூ' (2.2) பட்ஜில சிலரின்ர குணமா மாறிட்டுது. மோட்டார்சைக்கிளை கம்பஸுக்க கண்டபடி முறுக்கிக் கொண்டு ஓடித்திரியிறது, ராக்கிங்கில எல்லை மீறிப்போறது, ஆர் எவர் எண்ட மட்டுமரியாதை இல்லாம எல்லாரையும் நக்கலடிச்சு வலிஞ்சு சண்டையை வரவழைக்கிறது எண்டு அந்த 'பட்ஜ்' பற்றி கம்பஸில பெரும் முறைப்பாடே இருக்கு.

இப்பிடிப்பட்ட அந்த 'பட்ஜ்'காரர் , 'மாகோஸ் வீக்கில' தாங்கள் வெண்ட போட்டியளில கத்திக்குளறி பெரும் ஆர்ப்பாட்டம் செய்வினம். வெண்டா எல்லாரும் இப்பிடிக் கூப்பாடு போடுறதும், கொண்டாடுறதும் சகஜம்தான். அதில பிழையில்லை. ஆனால் தாங்கள் கூப்பாடு போடுற மாதிரி மற்ற 'பட்ஜ்' காரரும் வெண்டால் அவையும் அதைச் சத்தம் போட்டுக் கொண்டாடினால் ஏற்றுக்கொள்ளவேணும். அதுதானேமுறை. ஆனால் 'ரூ பொய்ண்ட் ரூ' காரர்தான் கொம்பு முளைச்ச 'பட்ஜ்' காரர் ஆச்சே. அவையெப்பிடிப் பொறுப்பினம்? அதால சிறவுண்டுக்க கொளுவுப்பட்டு, இரண்டாம் வருட முதலாம் அரையாண்டில படிக்கிற ஒரு சிங்களப் பெடியன்ர கையை முறிக்கிற அளவுக்கு நிலைமை போட்டுது. எண்டாலும் இதைக் கொம்பிளைண்ட் பண்ணினால் பிரச்சினை பெரிசாகிடும் எண்டு அந்தச் சிங்களப் பெடியன் பிரைவேட்டா கையைக் காட்டிப் போட்டு பேசாமல் இருந்திட்டான். லெக்சர்மார் வந்துதான் பிரச்சினையை ஒருமாதிரி நிப்பாட்டினவை. அதோடயாவது அந்த 'பட்ஜ்' காரர் கொஞ்சமாவது அடங்கியிருக்கவேணும். ஆனால் அவை அடங்கிற ஆக்களில்லைத்தானே அடுத்தநாளும் இந்தக் கொம்பு வைச்ச 'பட்ஜ்' காரர் கொழுவலெடுத்து, தங்கட சீனியர்சில கையும் வைச்சு, கையில போட்டிருந்த சில்வர் வளையத்தால தலையிலையும் குத்தி, பெரும் பிரகண்டமாகிப்போச்சு. தலையில காயப்பட்ட மூன்றாம் வருட பெடியனுக்கு இழை போடுறளவுக்கு ஆழமா அந்த வளையத்தால குத்துப்பட்டிருக்கு. இன்னும் கொஞ்சம் ஆழமாக் குத்தியிருந்தா உயிருக்கும் ஆபத்தா முடிஞ்சிருக்கும். இந்தமுறை மூன்றாம் வருடக்காரர்தான் 'மாக்கோஸ்' நிகழ்வை நடத்தினவாம். அதால், நிகழ்வை எப்பிடியாவது நடத்தி முடிக்கோணும் எண்டதுக்காக, தங்கட ஜூனியாஸ் அடிக் கேக்கையும் அவங்கள் பொறுமையா நிண்டதாத் தகவல். இல்லாட்டி அவங்களும் திருப்பி கைவைச்சிருந்தால் இன்னும் நிலைமை மோசமாகியிருக்கும்.

இப்ப ரண்டு பட்ஜ்காரருக்கும் விசாரணை முடியும்வரை கம்பஸுக்க கால் வைக்கக்கூடாது எண்டு கடிதம் குடுபட்டிருக்கு. ஆனால் அடிச்ச ஆக்களுக்கு மட்டுமில்லாமல், அடிவாங்கின ஆக்களுக்கும் இந்த வகுப்புத்தடைக் கடிதம் குடுபட்டிருக்காம். விசாரணை ஒழுங்கா நடக்கிறதுக்காகத்தான் இப்பிடி ரண்டு தரப்புக்கும் தடை எண்டு சொல்லுப்பட்டாலும், பாதிக்கப்பட்டவங்களை இன்னும் பாதிக்கப்பட வைக்கிறது நியாயமில்லையே. அதோட இந்தப் பிரச்சினைக்கு பிள்ளையார்சுழி போட்ட அந்தக் கொம்பு முளைச்ச பட்ஜ்ஜில முன்னுக்கு நிண்டு சண்டையைத் தொடங்கிறவருக்கு இது மூண்டாவது தடை. இதுக்கு முதல் ராக்கிங் பிரச்சினையாலையும், இன்னொரு அடிபாட்டுக் கேஸிலையும் இப்பிடி ஆளுக்குத் தடை விதிச்சவை. அப்பிடியும் அடங்காமல் இந்தமுறையும் தடை வாங்குறளவுக்கு ஆள் 'வன்மக் குடோனா' திரியிறார். இப்பிடி நிர்வாகத்துக்கு அடங்கமறுக்கிற, தொடர்ந்தும் பிழை செய்யிறவை கட்டாயம் தண்டிக்கப்படோணும். அதைமாதிரி பிழை செய்யாதவையும் தண்டிக்கப்படக்கூடாது. இந்தப் பட்சிக்கே தெரிஞ்ச இந்த விசயங்கள் மெத்தப் படிச்சவை இருக்கிற கம்பஸ் நிர்வாகத்துக்கு தெரியாமலா இருக்கப்போகுது?

- பட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றத்தில் ஈடுபடும்

# எம்.பி.க்களை பதவிநீக்க புதிய சட்டம் அவசியம்!

## வலியுறுத்துகின்றது ஐ.ம.ச.

**கொழும்பு, ஜூன் 6**

**குற்றச்செயல்களில் ஈடுபடும் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பதவி நீக்குவதற்கான சட்டத்தை அரசாங்கம் உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளதாவது:-

குற்றச்செயல்களில் ஈடுபட்ட, தவறாக நடந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளபோதும், தற்போதைய சட்டங்களில் இதற்கான ஏற்பாடுகள் இல்லை. தற்போதைய சட்ட ஏற்பாடுகளின் படி கிரிமினல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டால் மாத்திரமே ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை பதவியிலிருந்து நீக்கமுடியும். தவறான செயல்களில் ஈடுபடும் நாடாளுமன்ற உறுப்பினரை பதவிநீக்குவதற்கான சட்டமொன்றை அறிமுகப்படுத்தவேண்டிய அவசியம் உள்ளது. ஆனால் நாங்கள் அரசாங்கத்தை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. உரிய சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்றார்.

இதேவேளை குற்றச்செயல்களில் ஈடுபடும் நாடாளுமன்ற உறுப்பினரை பதவிநீக்குவதற்கான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை உள்ளது என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

இதை அரசமைப்பு மாற்றங்கள் ஊடாகவே மேற்கொள்ளமுடியும். தற்போதைய சூழ்நிலையில் குற்றம்சாட்டப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பாக குறிப்பிட்ட கட்சியின் தலைவர்களால் மாத்திரம் தீர்மானம் எடுக்கமுடியும். ஆனால் இது வெற்றியளிக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினரை பதவியிலிருந்து நீக்குவதற்கு வழிவகுக்கும் அரசமைப்பு மாற்றத்தை அறிமுகப்படுத்த வேண்டும் - என்றார். (ஏ-இ)

# வரிக் கோப்பு திறக்கப்பட்டாலும் வரி செலுத்தும் அவசியமில்லை!

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 6

வரிக் கோப்புகள் திறக்கப்பட்டாலும் அனைவரும் வரி செலுத்த வேண்டியதில்லை. வரி செலுத்தவேண்டியவர்கள் அதைப் புறக்கணித்து வருகின்றனர். அதனால் நலனோம்பு மற்றும் நிவாரணங்கள் வழங்குவதில் பிரச்சினை ஏற்படுகிறது - இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

வரி செலுத்தவேண்டியவர்களின் பதவிநிலை மற்றும் வரி விதிப்புக்கு உள்வாங்கப்படுபவர்களின் பட்டியல் நிதி அமைச்சால் கடந்த வாரம் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் வரி செலுத்தவேண்டியவர்களில் மிகவும் குறைந்தளவானோரே வரி செலுத்துகின்றனர். தற்போது வரி செலுத்த வேண்டியவர்களின் கோப்புகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக அனைவரும் வரி செலுத்தவேண்டும் என்றில்லை. வரிக் கோப்புகள் திறப்பதன் மூலம், வரி செலுத்துவதற்கு எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்பதை எங்களால் தெரிந்துகொள்ளமுடியும். அவ்வாறு இல்லை என்றால் வரி செலுத்தவேண்டியவர்கள் அதைப் புறக்கணித்துவிடுகின்றனர்.

அரசர்களது காலத்தில் இருந்து நாட்டில் வரிகளின் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலமே நலனோம்பு வேலைத்திட்டங்கள் நிவாரண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எந்தவொரு நாட்டுக்கும் வரி மிகவும் முக்கியமானதாகும். கடந்த காலங்களில் நாட்டில் பெருமளவில் வரி குறைப்பு செய்தமையாலே அரசாங்கத்தின் வருமானம் குறைவடைந்து பொருளாதார நெருக்கடி ஏற்படக் காரணமாக அமைந்தது - என்றார். (ஏ-இ)

# உலகளாவிய ரீதியில் மீள நெருக்கடி எழும்

## நிதி இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 6

உலகளாவிய ரீதியில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படக்கூடும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தந்திரிமலை பகுதியில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளது. அரச செலவினங்கள் அத்தியாவசிய தேவைக்கு மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டில் தற்போது பொருளாதாரம் மீண்டெழுந்து வருகின்றது. எதிர்காலத்தில் உலகில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்பட வாய்ப்புள்ளது என்று தரவுகள் தெரிவிக்கின்றன. 2024ஆம் ஆண்டுக்குச் செல்லும்போது, தற்போதைய நிலையை விடவும் அதிகளவில் வெற்றியை நோக்கிப் பயணிக்க முடியும் - என்றார். (ஏ-இ)

நாடு முன்னேற வேண்டுமானால்

# சட்டத்துறைத் தொழில்முனைவை அடையாளம் காண்பது அவசியம்

## பைசர் முஸ்தபா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 6

நாம் ஒரு தேசமாக முன்னேற வேண்டுமானால், சட்டத்துறை தொழில்முனைவின் முக்கியத்துவத்தை அடையாளம் காண்பது முக்கியமானது என்று தேசிய சட்டத்தரணிகள் சம்மேளனத்தின் தலைவர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

நுவரெலியாவில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒரு தேசமாக நாம் நெருக்கடியான காலகட்டத்தில் இருக்கிறோம். இது சட்டத்தரணிகள் சமூகத்தை ஒன்றிணைக்கும் மாநாடு மாத்திரமல்ல. நாட்டையும் நாட்டின் பொருளாதாரத்தையும் மீட்பதற்காக கொள்கை வகுப்பாளர்கள், அதிகாரிகள் மற்றும் வர்த்தக சமூகத்தினருக்கு இடையேயான கருத்துப் பரிமாற்றத்தின் தொடக்கமாக இந்த மாநாட்டை நடத்த நாங்கள் முடிவு செய்தோம்.

ஒரு தேசமாக நாம் முன்னேற வேண்டுமானால், சட்டத்துறை தொழில்முனைவின் முக்கியத்துவத்தை அடையாளம் காண்பது முக்கியமானது. தொழில் மற்றும் தொழில்முனைவோர் சட்டத்தின் ஆட்சியை ஏற்கவேண்டும். இந்த விடயத்தில் நிரந்தரமான தீர்வுகளைக் காண்பதில் அரசியல் தலைமைகளையும் ஈடுபடுத்துவது மிகவும் அவசியம். அப்போதுதான் இந்த மாநாட்டின் வெற்றிகரமான முடிவுகளை எம்மால் பெற முடியும் - என்றார். (ஏ-இ)



# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்பட வேண்டிய நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்து விடவும். மாலை வேளையில் நன்மைகள் நடைபெறும்.



**இடபம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சிறு சிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும்.



**மிதுனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் இடையூறுகளும் நீங்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை.



**கடகம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.



**சிம்மம்:** உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சிறு சிறு சச்சரவுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.



**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். சகோதரர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.



**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.



**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.



**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், திடீர் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.



**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை வாங்கிக் கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்துவீர்கள்.



**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எதுவும் இன்று எடுக்க வேண்டாம்.



**மீனம்:** குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. நண்பர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அதிகாரச்சுவை பொல்லாதது

ஆசை பொல்லாதது. எப்படிப்பட்ட புனிதர்களையும் கூட ஆசை பற்றிப்பிடித்துவிட்டால் அவ்வளவுதான், அவர்களும் தலைகீழானவர்களாக மாறிவிடுவர். மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்பவற்றை விடவும் அதிக வீரியம் கொண்டது அதிகார ஆசை. மற்றைய ஆசைகள் நிறைவேறி விட்டால், படிப்படியாக அவை குறைந்துவிடும். ஆனால் அதிகாரத்தின் ஆசை அப்படிப்பட்டதல்ல. அதிகார ஆசையின் நிழல் ஒருமுறை பட்டுவிட்டால், அது இன்னும் விரிவடைந்து, கரையில்லாத ஆறாகப் பெருக்கெடுத்தோடும். அதனால்தான் மக்களுக்காக உழைக்கப்போவதாகவும், மாற்றங்களை நிகழ்த்தப் போவதாகவும் சொல்லிக்கொண்டு அரசியலுக்குள் நுழைபவர்கள் எல்லோருமே, பின்னர் ஊழல், மோசடி என்ற சாக்கடை வாசிகளாக மாறிவிடுகின்றனர். இந்த விதிக்கு இலங்கையின் ஜனாதிபதி ரணில் மட்டும் விதிவிலக்கல்லவே. அம்பியாக இருந்த ரணில் இப்போது அந்நியனாக மாறியிருக்கிறார்.

அரசியல் அரங்கில் ரணில் விக்கிரமசிங்க மென்போக்கான, எதையும் தன் இராஜதந்திரத்தால் வெல்லக்கூடிய ஓர் அரசியல்வாதியாகவே அடையாளப்படுத்தப்பட்டிருந்தார். அதனால் அவருக்கும் படைத்தரப்புக்குமிடையிலான ஊடாட்டங்கள் அவ்வளவு சாதகமானதாக இருக்கவில்லை. கூடவே போர் நடைபெற்ற காலத்தில் ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த கோத்தாபய, பாதுகாப்புச் செயலராக நியமிக்கப்பட்டதால், ஒட்டுமொத்தப் படைத்தரப்பையும் அந்தக் குடும்பம் தன் விசுவாசிகளாக மாற்றியது. இறுதிப்போரில், தமிழ் மக்களின் உயிரையும், உடைமைகளையும் மேய்வதற்கான கட்டற்ற சுதந்திரத்தைக் கொடுத்ததோடு, அங்கு நிகழ்த்தப்பட்ட மனுக்குல வரலாற்றில் மோசமான இனப்படுகொலையைச் செய்த படையினரையும் பாதுகாப்பதில் ராஜபக்சக்கள் முன்னின்றனர். இவ்விதம் படைத்தரப்பினரிடம் உண்டான ராஜபக்ச குடும்பம் மீதான விசுவாசம் அவர்கள் பதவியில் இல்லாதபோதும் தொடரவே செய்தது. இதனாலேயே, ரணில் – மைத்திரி கூட்டாட்சியின் போதும், அரசாங்கத்தோடு படைத்தரப்பு ஒருவித ஒத்துழையாத் தன்மையோடு செயற்பட்டது. ஆனால் 'அரகலய' போராட்டத்தின் பின்னர் இந்தநிலை அப்படியே மாறியது.

தன்னுடைய ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக, ஜனாதிபதியாக இருந்த கோத்தாபய படைத்தரப்பின் பலவீனத்தாலேயே போராட்டம் விரிவடைந்ததாகச் சீறிச் சினக்கத் தொடங்கினார். அதேவேளை, 'அரகலய' போராட்டத்தில் தலையிடவேண்டாமென்று படையினர் மீது வெளிச்சக்திகளும் அழுத்தம் கொடுத்தன. இதனால் அப்போதைய இராணுவத்தளபதியும், கோத்தாபயவின் போர்க்குற்றக் கூட்டாளியுமான சவேந்திர சில்வா, வல்லமை கொண்ட நாடுகளின் கைப்பாவையான ரணில் பக்கம் தாவினார். அதனால்தான் கோத்தாபயவின் ஜனாதிபதி மாளிகையை 'அரகலய' போராட்டக்காரர்க்ள் உடைத்து உள்நுழைந்தபோதுகூட, கைகட்டி வேடிக்கை பார்த்த படையினர், பின்னர் ரணில் ஜனாதிபதியானதும் காலிமுகத்திடலில் எவரும் கால் வைக்கமுடியாதபடி உக்கிரம் கொண்டவர்களாக மாறினர். ரணிலும் படைத்தரப்பை வானளாவப் புகழத்தொடங்கினார். மக்களைச் சந்திப்பதை விடவும் படைத்தளங்களுக்கு 'விசிட்' அடித்து, அவர்களின் நலன் குறித்த தன் அக்கறையைக் காண்பிக்கத் தொடங்கினார். ராஜபக்சக்களின் பிரம்மாஸ்திரமான படையாதரவை, ரணில் நோகாமல் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டார். இதனால் இராணுவச் சதியின் மூலம் தன் ஆட்சி கவிழ்க்கப்படும் சாத்தியங்களையும் ரணிலால் இல்லாதாக்க முடிந்தது.

இருப்பினும், படைத்தரப்பை இன்னும் குஷிப்படுத்தி, அவர்களைத் தனது நிரந்தர அடிமைகளாக மாற்றுவதற்காக அவர்களை இன்னும் பலப்படுத்தவும், புதிய பதவிகள், கூடுதல் அதிகாரங்கள் என்பவற்றை வழங்கவும் நகர்வுகளை ஜனாதிபதி ரணில் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார். முப்படைகளின் பிரதானி என்ற பதவிநிலைக்கு மேலதிகமாக பிரதிக் கூட்டுப்படைத் தளபதி என்ற பத்வி நிலையை உருவாக்கி, அவரூடாக நேரடியாக பாதுகாப்புச் செயலரும், ஜனாதிபதியும் முப்படைகளினதும் தேவைகளையும், பாதுகாப்பு பிரச்சினைகளையும் அறிந்து உடனுக்குடன் அவற்றைப் பூர்த்தி செய்யமுடியுமென்று ரணில் கணக்குப் போடுகின்றார். இதன் மூலம் தன் பக்கமாக படையினரை இன்னமும் ஈர்த்து, ஒருபோதும் தனக்கெதிராக அவர்கள் திரும்பாத வகையில் ரணில் வியூகங்களை வகுக்கின்றார். இவையெல்லாமே அதிர்ஷ்டத்தின் மூலமாகத் தன் மடியில் விழுந்த ஜனாதிபதிப் பதவியைப் பாதுகாப்பதற்கே. பொருளாதார நெருக்கடியில் நாடு சிக்கி, மெல்ல மெல்ல ஆசுவாசப்படும்வேளையில், புதிய பொருளாதாரத் திட்டங்களை வகுப்பதை விடுத்து, படைத்தரப்பை வளைத்து எப்படித் தன் அதிகாரத்தைத் தக்க வைக்கலாம் என்பதிலேயே ரணிலின் முழுக்கவனமும் குவிந்திருக்கிறதுபோலும். நாட்டினதும், மக்களினதும் நலன்களை விடவும் ரணிலுக்கு படைத்தரப்பின் நலன் பேணுகையே முதன்மையானதாகவிருக்கின்றது.

எப்படியிருந்த ரணில், இப்படியாகி விட்டாரே.

### நாளொரு நல்வார்த்தை

"இலக்குக்கும், அதைச் சாதிப்பதற்கும் இடையில் பாலமாக இருப்பது நாம் கடைப்பிடிக்கும் ஒழுக்கம் மட்டுமே!"

– அன்னை தெரேசா




# மஹிந்த குடும்பத்தினர் விசாரிக்கப்படவேண்டும்

## சிறீதரன் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 6**

**இலங்கையில் ஒரு நீதியான ஆட்சி அமைய வேண்டுமாக இருந்தால், பல்வேறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட மஹிந்த ராஜபக்ச குடும்பம் விசாரிக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**

கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டிலேயே 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் இலங்கை வருமானவரித் திணைக்களத்தில் பதிவுசெய்து தங்களுடைய வருமானங்களுக்கு வருடாந்தம் வரிசெலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது. ஒரு நாட்டிலே வரி அறவிடுவது என்பது மிகநல்ல விடயம். ஆனால், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உரிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்காத அரசாங்கம் 18 வயதை அடைந்ததும் வரியை அறவிடுவதானது மிகமிக மோசமான நிலையைத்தான் காட்டி நிற்கின்றது.

இந்த அரசாங்கத்தில் பலர் பல்வேறுபட்ட மோசடிகளைச் செய்திருக்கின்றனர். மத்திய வங்கியில் கொள்ளையிட்டவர்கள்கூட இன்னமும் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. சீனியிலும் தேங்காய் எண்ணெயிலும் மோசடி செய்த கோத்தாபயவின் குடும்பத்தை விசாரணை செய்யும் திராணி ரணில் அரசாங்கத்திடம் இல்லை. விடுதலைப்புலிகளிடமிருந்து நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையடித்து வெளிநாட்டு வங்கிகளிலே வைப்பிலிட்டு வைத்திருப்பவர்களுக்கு எதிராக இதுவரையும் எந்த விசாரணைகளும் மேற்கொள்ளவில்லை. ஆனால் இளைஞர்களின் பணத்தைச் சுரண்டுவதற்கு மட்டும் இந்த அரசாங்கம் தயாராகியுள்ளது. இந்தத் தீவிலே ஒரு நீதியான ஆட்சி அமைய வேண்டுமாக இருந்தால் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட மஹிந்த ராஜபக்சவின் குடும்பம் விசாரிக்கப்படவேண்டும் - என்றார்.

(ம-113)

# சிறுவர்களிடத்தே தோல் நோய்கள்!

கொழும்பு, ஜூலை 6

தற்போதுள்ள வெப்பமான காலநிலையால் சிறு குழந்தைகளுக்கு தோல் நோய்கள் ஏற்படுவது அதிகரித்துள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

பெற்றோர் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார். வரண்ட காலநிலையால் நீர்ப்போக்கு போன்ற நிலைமைகளும் குழந்தைகளிடம் காணப்படுகின்றன என்று நிபுணர் கலாநிதி தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

(எ-இ)

**நாளை** 07.06.2023 புதன்கிழமை வைகாசி 24

சுபநேரம் : 04.22 - 05.52

ராகுகாலம் : 11.52 - 01.22

சங்கடஹர சதுர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இஸ்ரேலில் வெப்பக்காற்று: 220 இடங்களில் தீ விபத்து!

டெல்அவிவ், ஜூன் 6

இஸ்ரேலில் நிலவும் கடும் வெப்பக் காற்றுக் காரணமாக கடந்த ஒரு வாரத்தில் 220 இடங்களில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலில் வரலாறு காணாத கடும் வெப்பம் தற்போது நிலவுகின்றது.

கடந்த 2ஆம் திகதி இஸ்ரேலின் வெப்பநிலை 43 டிகிரி செல்சியஸைத் தாண்டியது.

இதனால் அந்த நாட்டில் பல இடங்களில் வெப்பக்காற்று வீசுவதுடன் தீ விபத்துக்களும் பதிவாகியுள்ளன.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 220 இடங்களில் இவ்வாறு தீ விபத்துப் பதிவாகியுள்ளது. இது இஸ்ரேல் வரலாற்றில் ஒரு வாரத்தில் பதிவான அதிகளவான வெப்ப இடர்களாகும். (ம)


## திருத்தம்

03.06.2023 ஆம் திகதிய (சனிக்கிழமை) பத்திரிகையில் 06,07, ஆம் பக்கங்களில் பிரசுரமான பொது அறிவித்தல் - "மாநகரசபைக்கு சொந்தமான கடைகளை குத்தகை உரிமை மாற்றம் செய்தல்" எனும் விளம்பரத்தில் "கீழ்க் குறிப்பிட்டுள்ள கடைகளின் தற்போதைய உரிமையாளர்களின் குத்தகை உரிமம் இரத்துச் செய்யப்படவேண்டி ஏற்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது" என்று திருத்தி வாசிக்கவும்

ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(cs50662 ) N-1.)



## மரண அறிவித்தல்



### ஐயாத்துரை சின்னாச்சிப்பிள்ளை

கந்தையா வீதி, சுன்னாகம் கிழக்கு சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சின்னாச்சிப்பிள்ளை நேற்று (05.06.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும், சிவஞ்ஞானதேவி, வல்லிபுரநாதன், முத்துநேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், தம்பித்துரை, தவமணிதேவி, அமரர் சத்தியமூர்த்தி ஆகியோரின் மாமியாரும், சிவதர்சன், சிவதர்சினி, சுரேகா, சோபனா, அனுசன், பங்கயன், மாகாந்தன், மாரமணன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தி யாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

கந்தையா வீதி,
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

077 438 1902, 076 7808 988,
076 3620 526

(Cs50629) N-1



## மரண அறிவித்தல்



தோற்றம் 29 08 1942

மறைவு 04 06 2023

### சுப்பையாபிள்ளை கந்தசாமி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொக்குவிலை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சுப்பையாபிள்ளை கந்தசாமி அவர்கள் கடந்த (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையாபிள்ளை - அம்பிகை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தவமலரின் ஆருயிர்க் கணவரும், கஜவதனியின் (சிரேஷ்ட விரிவுரையாளர், விலங்கியல் பீடம், யாழ். பல்கலைக்கழகம்) பாசமிகு தந்தையும், பார்த்தூரனின் (பொறியியல் உதவியாளர், திட்ட அலுவலகம் - நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, யாழ்ப்பாணம்) அன்பு மாமனாரும், அதித்திரியின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சீதாலட்சுமி, சரஸ்வதி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ராஜமாணிக்கம் மற்றும் யோக சுந்தரம், தங்கராஜா, வசந்தகுமார், வசந்தமாலா, விக்னேஸ்வரி, நந்தினி, கல்யாணி, வசந்தராணி, ரவி, மகேஷ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இந்திராதேவி, லீலாவதி, ஆனந்தராஜா, தியாகராஜா, லோகநாதன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (06.06.2023) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.


கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மகள் : 077 228 1881
மருமகன் : 077 973 8820

(CS 25149) A-1



## மரண அறிவித்தல்



தோற்றம் : 01.02.1951 மறைவு: 05.06.2023

### திரு.கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (VC பாலன்)

காரைநகர் களபூமி சத்திரந்தையை பிறப்பிடமாகவும், 37/38K, சேர் பொன். இராமநாதன் றோட், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (VC பாலன்) அவர்கள் நேற்று (05.06.2023) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சடாச்சரம் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயலட்சுமியின் ஆருயிர்க் கணவரும், ஜெயந்தன் (முகாமையாளர், இலங்கை வங்கி, சாவகச்சேரி), முகுந்தன் (தாதிய உத்தியோகத்தர் -யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மேருஷா (இலங்கை வங்கி), கஜவல்லி (யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தவமணிதேவி, சரஸ்வதி, கந்தையா, சபாரட்ணம் மற்றும் நல்லையா, தங்கரத்தினம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்புத் தம்பியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2023) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

37/38K,
சேர் பொன். இராமநாதன் றோட்,
யாழ்ப்பாணம்.

077 2269 810
077 2007 630

(CS 39972) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Job Description – Logistics Manager
## The HALO Trust – Sri Lanka

**Job Title:** Logistics Manager
**Location:** Sri Lanka – Kilinochchi
**Reporting To:** Programme Manager, Deputy Programme Manager

**Main Description**

The Logistics Manager is responsible for overseeing all logistics, procurement and distribution processes across HALO's Sri Lanka programme, contributing to the smooth and effective cooperation between mine clearance operations and support departments. The Logistics Manager will manage a team of Logisticians, Procurement Officer and Data Entry Officers based in Kilinochchi and Jaffna offices, work closely with HALO's support staff in Colombo and serve as point of contact for HALO's global logistics team based in the UK. The Logistics Manager reports directly to the Programme Manager and Deputy Programme Manager and in coordination with the Kilinochchi Office Manager and finance team.

**Key Responsibilities**

- Strategically plan and manage logistics, warehouse, transportation and staff services
- Direct, optimise and coordinate full order cycle.
- Liaise and negotiate with suppliers, manufacturers, retailers and relevant staff. Keep track of quality, quantity, stock levels, delivery times, transport costs and efficiency
- Manage purchase requirements, placing of orders and delivery of items in a timely manner.
- Manage logisticians from all locations to source good quality items for the best price and analyse the quotations.
- Maintain metrics and analyse data to assess performance and implement improvements.
- Understand, follow and implement all of HALO's policies relevant to procurement in particular the anti-bribery, anti-corruption, whistle blowing and relevant sections of the finance policy, in cooperation with HQ Logistics and other relevant staff.
- Mentor and supervise Data Entry Officers & Procurement Officer and maintain daily oversight of the logistics database, including following up on pending purchases.
- Supervise, coach and train storekeepers as required.
- Daily collaboration with other departments, especially demining stores, and workshop to ensure that stock levels are in order and to project the needs of various departments up to six months ahead.
- Monitor the capital equipment list which is maintained by the Data Entry Officers (in collaboration with the Fleet Manager, Workshop Manager & Demining Store Manager)
- Plan international procurement with HQ Logistics through smart sheet.
- Coordinate international procurement with Colombo office for importation procedures and other legislative requirements.
- Provide procurement support to Office Manager, Finance Manager, HR Manager, Demining Stores Manager, Technician, Fleet Manager, Workshop Manager, Spare Parts Storeman, Head Driver, and international staff as required.
- Plan a store check as needed and a 100% check of capital equipment every year.
- Develop a capital equipment purchase plan with the Programme Manager.
- Provide support to the International Finance manager (IFM) & Finance manager for audit requirements in procurement.
- Evaluate budgets and expenditures with IFM & Finance Manager
- Provide Logisticians with daily expense information and coordinate with the finance team.
- Ensure daily procurement activity is reviewed in all locations and procurement & service provision is finalised.
- Through the Procurement Officer, ensure that vehicle rental service agreements and other service agreements are prepared and completed according to HALO's global procurement policy.
- Any other duties as requested.

**Role Requirements**
**Essential**

- Sri Lanka citizen
- Fluent spoken and written Tamil/Sinhala.
- Excellent spoken and written English.
- Significant experience in procurement and tender processes, preferably in an (I) NGO setting
- Experience in leading a team.
- Strong IT skills
- Strong numeracy skills and data analysis skills
- Excellent interpersonal and analytical skills with meticulous attention to details.
- Ability to work effectively in a team in a culturally diverse environment.
- Ability to work well under stress and in a fast-paced environment.
- Excellent time management skills and ability to multi-task and prioritise work.
- Strong organisational, planning, and problem-solving skills.
- Commitment to HALO's Values and Standards at all times, in and out of work.
- Commitment to HALO's Global and National Policies, including Safeguarding & Whistleblowing

**Desirable**

- University degree in supply chain, logistics, business management or related field.
- Previous (I)NGO work experience
- Experience in humanitarian Mine Action.

All applications must be submitted no later than Thursday 15th June 2023. Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

HR Manager
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi
hr@halosrilanka.org

(CR/39969)AH-1

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 . 07 . 1945



உதிர்வு 28 . 05 . 2021

அமரத்துவ மாது
## சிவகாமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை
திதி: 06.06.2023

வார்த்தைகலே இல்லாத வடிவம்
அளவுகோளே இல்லாத அன்பு
சுயநலமே இல்லாத இதயம்
அவர்தான் எங்களின் அம்மா!
வாழ்ந்த நாட்களை வசந்தங்களாக்கி
விட்டுச் சென்ற வாடா மலரே - அம்மா!
உதிர்ந்தது உங்கள் உயிர் மட்டுமல்ல
உடைந்தவை எங்களின் இதயங்களும் தான்
எங்கள் இதய நதியில் ஓடமாய்
உங்கள் நினைவுகள் என்றும்
ஓடிக் கொண்டேயிருக்கும் அழியாத ஓவியமாய்.

புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

உங்கள் நினைவுகளுடன்
கணவர்,
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

(in 24708) (N-1)

# 63ஆம் ஆண்டு பிறந்ததினமும் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

தோற்றம் 07 . 06 . 1960



மறைவு 28 . 05 . 2021

அமரர் திருமதி
## ஸ்ரீரஞ்சினி ஆனந்தகுமாரசாமி
(யாழ். பல்கலைக்கழக ஆங்கிலமொழி விரிவுரையாளர்)
திதி: வைகாசி தேய்பிறை திருதியை (06.06.2023)

ஒன்று இரண்டு மூன்று - என
அரவணைத்து கல்வி தந்தீர்
ஒன்று இரண்டு மூன்று - என
வருடங்களை
எண்ணத்தானோ?

நீவிர் இல்லா இவ்வுலகு
நீர் இல்லா பாலைவனம் - அது
கானல்களை காட்டி நம்
கண்ணீரை கூட்டுகிறது!

இல்லாமை இல்லாத
வாழ்வு இல்லை - நீவிர்
இல்லாமையே எம்
வாழ்வின் துயர எல்லை

ஆவலுடன் காத்திருந்த உங்களை
அகவைதினம் நாளை
ஆண்டவன் கழல் சேர்ந்த
ஆண்டு இரண்டு இன்று......!!!

36 / 1 B, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.
021 222 9367

(cs.50660) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 04 . 1957



மறைவு 04 . 06 . 2023

## திருமதி விஜயலக்ஸ்மி சண்முகநாதன்

இணுவில் கிழக்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி விஜயலக்ஸ்மி சண்முகநாதன் நேற்றுமுன்தினம் (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் மற்றும் தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் பூரணம் தம்பதியரின் மருமகளும், சண்முகநாதன் அவர்களின் மனைவியும், கார்த்திகாவின் அன்புத் தாயாரும், நாதரூபனின் அன்பு மாமியாரும், ஹரிஷின் அன்புப் பேர்த்தியும், நடேசலிங்கம், இராசலட்சுமி, இராசலிங்கம், ஜெயலட்சுமி, பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயலட்சுமி, சச்சிதானந்தம், பத்மரஜனி, ஸ்ரீதர், காலஞ்சென்ற உருத்திரமூர்த்தி மற்றும் சிவமணி பாலச்சந்திரன், கருணாமூர்த்தி, சிவகுமார் மற்றும் ஜெயகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2023) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

0707555075 (cs 24132) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 03 . 1964



மறைவு 01 . 06 . 2023

## திருமதி பாலேந்திரன் செல்வராணி

சுதுமலை வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலேந்திரன் செல்வராணி கடந்த (01.06.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அல்பிரட் வியாகுலம்மாவின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற பாலேந்திரனின் பாசமிகு மனைவியும், தர்சன், கேசன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிராளராசா, செல்வரத்தினம் (கமலா), ஆனந்தராசா இந்திராணி, இராஜவேலு, புஸ்பராணி, யோகராணி, செல்வகுமார் ஆகியோரின் சகோதரியும், சரோஜினிதேவி, சாந்தகுமாரி, மகேந்திரராஜா, குமுதினி வேலழகன், தவமோகன், நந்தினி, புஸ்பராணி, காலஞ்சென்ற ஆனந்தராணி மற்றும் அமிர்தராணி, ஆனந்தராசா, வசந்தராணி, கமலராணி, விமலராணி ஆகியோரின் மைத்துனியும், பட்டம்மாவின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்திகம் (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**திருத்தம்:** நேற்றுமுன்தினம் (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை வெளிவந்த மரண அறிவித்தலில் குமுதினி என்ற பெயர் தவறுதலாக தவறவிடப்பட்டுள்ளது என்பதனை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
077 800 9082 (cs 24132) (2.6)

தகவல்: குடும்பத்தினர்

## வேலையாள் தேவை

நெல்லியடியில் உள்ள அசைவ உணவகத்துக்கு சமையலாளர், றொட்டி போடுபவர் மற்றும் உதவியாளர் தேவை.

077 227 0605 (CS/39970)AH-1

## விசாகப் பொங்கல்

கல்வயல் முத்துமாரி அம்பாள் கோயில் விசாகப் பொங்கல் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் என நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ய-9)

## தவறவிட்ட பொருளை வந்து பெற்றுக்கொள்ளவும்

நீங்கள் 25.05.2023 இல் என்னிடம் வாங்கிய வீட்டுத்தளபாடங்களில் ஒன்று இங்கு தவறவிடப்பட்டுள்ளது. என்னைத் தொடர்பு கொண்டு வந்து எடுத்துச் செல்லவும்.

077 993 5844 (CS/50721) AH-1

# மரண அறிவித்தல்

## சிவஸ்ரீ செல்லப்பாக்குருக்கள் நகுலேஸ்வரக்குருக்கள்



மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பாக்குருக்கள் நகுலேஸ்வரக் குருக்கள் நேற்று (05.06.2023) காலை 09.00 மணியளவில் இறைவனடி சேரந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பாக் குருக்கள் - தவமணி அம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான இரகுநாதசர்மா - கமலாம்பிகை தம்பதியரின் மருமகனும், யாழரசியின் அன்புக் கணவரும், கஜநேசக்குருக்கள், கஜேந்தினி, கஜப்பிரியக்குருக்கள் ஆகியோரின் அன்புத் தந்தையும், கர்ணிகா, ரஜீபசர்மா, ஜனனி ஆகியோரின் அன்பு மாமனாரும், சுந்தரேஸ்வரசர்மா, செண்பகவல்லி, ஹம்சவல்லி, மாங்களேஸ்வரக்குருக்கள், சுந்தரவல்லி ஆகியோரின் சகோதரரும், மீனலோஜனி, உலகேஸ்வரக் குருக்கள், வைத்தீஸ்வரக்குருக்கள், ரஜிதா ஆகியோரின் மைத்துனரும், கஜகீதசர்மா, கஜகீர்த்திசர்மா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2023) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

தொடர்பு: 077 628 4275 (cs 50718) (N-1)

## சடலம் மீட்பு!

கொழும்பு, ஜூன் 6

பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு - குடியகல்வுத் திணைக்களக் கட்டடத்தில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

அந்தக் கட்டடத்தில் உள்ள கதிரை ஒன்றில் இருந்து இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்தத் திணைக்களத்தின் சுத்தப்படுத்தல் பிரிவில் பணியாற்றிய ஹோகந்தர பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## கேள்வி அறிவித்தல் - திருத்தம்
## சபைநிதி -2023
## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வட மாகாணம்.

1. சபைநிதி – 2023 மூலமான அபிவிருத்தி ஒதுக்கீட்டின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு **(தொலைபேசி: 021 229 1023** e.mail – pkipsmullai@gmail.com ) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை 19.06.2023 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 06.06.2023 ம் திகதியிலிருந்து 19.06.2023 ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **3000.00** (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
6. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு **புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** எனும் முகவரிக்கு 19.06.2023 ம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும்.
7. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 45 (03.08.2023) நாட்கள் வரை செல்லுபடியாகும்.
8. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகையினை வங்கிப் பிணையாக மாத்திரம் செலுத்த முடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(04)/Coun./Cap./Dev/01/2023 | தலைமை அலுவலகத்திற்கு குளிரூட்டி பொருத்துதல் | 2.5 | 30 நாட்கள் | வடமாகாணத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் | 25,000.00 | 31/08/2023 |
| NP/14/44(04)/Coun./Cap./Dev/02/2023 | வீதி விளக்கு கொள்வனவு | 1.7 | 30 நாட்கள் | | 17,000.00 | 31/08/2023 |

9. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிரதேசசபை பெறுகைக்குழு**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை.**
**புதுக்குடியிருப்பு**
**06.06.2023**

(CR/39968)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அமைதிப்படை படுகொலை: வாதரவத்தையில் நினைவுகூரல்




யாழ்ப்பாணம், ஜுன் 6

இந்திய அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் 33 ஆண்டுகளின் பின்னர் புத்தூர் வாதரவத்தையில் நேற்றுமாலை நினைவு கூரப்பட்டனர்.

1987ஆம் ஆண்டு வாதரவத்தையில் இந்திய அமைதிப்படையால் ஒன்பது பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

உயிரிழந்த பொது மக்களை நினைவு கூருவதில் கடந்த காலங்களில் அச்சமான சூழல் நிலவிவந்ததன் காரணமாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இளையகுட்டி பரஞ்சோதியின் தலைமையில் உடைக்கப்பட்ட நினைவு தூபிக்கு அருகில் நினைவுகூரல் முன்னெடுக்கப்பட்டது.

அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு பிள்ளையார் ஆலயத்தில் மோட்ச அர்ச்சனை செய்யப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

படுகொலை செய்யப்பட்டவர்களின் பிள்ளைகள் மனைவி மற்றும் உறவினர்கள் ஆகியோரால் பொதுச்சுடர் மற்றும் நினைவுச் சுடர் ஏற்றி கண்ணீர் மல்க மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

(ஒ-இ)



## பல்லவராய மன்னன் சிலை திறந்து வைப்பு



கிளிநொச்சி, ஜுன் 6

பூநகரி பிரதேசசபையால் பல்லவராயன் கட்டு சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட பல்லவராய மன்னன் சிலை நேற்றுக்காலை திறந்து வைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிலையைத் திறந்து வைத்தார். (அ-ஒ,113)

**வேலையாள்கள் தேவை**

றொட்டி / அப்பம்
வேலை தெரிந்தவர்கள்
உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
**076 423 6862, 076 844 3590**

**மணிவிழா வாழ்த்துக்கள்**



யா/ அல்லாரை அரசினர்
தமிழ் வித்தியாலய ஆசிரியர்
**திரு.தர்மலிங்கம் விக்னேஸ்வரன்**
SLTS-I (கணித ஆசான்)

Best Wishes

சேவை விபரம்

1. ம.மா.கொ.சீன் த.வித்தி. 1983-1987
2. யா/பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை 1987 - 1988
3. ம.மா/கொத்.பூண்டுலோயா த.வித்தி. 1989-1995
4. ம.மா/கொத்.இறம்பொடை த.ம.வித்தி. 1995-1997
5. ம.மா/கொத். விவேகானந்தா ம.வித்தி. 1997 - 1998
6. ம.மா/கொத். பூண்டுலோயா த.ம.வித்தி. 1998-2000
7. வலயக் கல்வி அலுவலகம், கொத்மலை. 2000-2008
8. யா/மீசாலை விக்னேஸ்வரா ம.வித்தி. 2008-2016
9. யா/அல்லாரை அ.த.க.வித்தி. 2016 - 2023

இன்று (06.06.2023) இல் அகவை அறுபதை அடைந்து மணிவிழாக்காணும் நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்.

## சிவசிதம்பரத்தின் நினைவேந்தல் நேற்று

யாழ்ப்பாணம், ஜுன் 6

அமரர் சிவசிதம்பரத்தின் 21ஆவது நினைவேந்தல் நேற்றுக் காலை 8:30 மணியளவில் நெல்லியடியில் அமைந்துள்ள அவரது நினைவுச் சதுக்கத்தில் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியச் செயலர் இ.ராகவன் தலைமையில் இடம்பெற்றது. ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டு நினைவுரை இடம்பெற்றது. நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் உட்பட அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் பங்கேற்றனர். (அ-ஒ,27)

**வேலையாள் தேவை**

யாழ்.கோண்டாவில் பகுதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு மின்பணியாளர் மற்றும் Solar பொருத்துனர் தேவை.
(பழக விரும்பும் நபர்களும் தொடர்பு கொள்ளலாம்)
வயது எல்லை-18 - 30 வயது
தங்குமிட வசதியும் உண்டு.
வெளி மாவட்டத்தவர்களும் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **077 3826 099**

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**




கடந்த 08 - 05- 2023 அன்று இறைபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவி
**திருமதி வேலாயுதம் பாலயோகினி (ராணி)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் (07 - 06 - 2023)புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து **Samuththiramahal Wedding Hall, K.K.S Road, Maruthanarmadam, Chunnakam.** நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுன்னாகம்

குடும்பத்தினர்.
0773075681

**மரண அறிவித்தல்**



தோற்றம் 17 . 07 . 1953

மறைவு 05 . 06 . 2023

**சிங்கரத்தினம் பரமகுரு**

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும், விநாயக முதலியார் வீதி, புலோலி மத்தி, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கரத்தினம் பரமகுரு நேற்று (05.06.2023) திங்கட்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான சிங்கரத்தினம் தங்கப்பொன்னு தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், அமரர் கந்தசாமி கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், தனலக்குமியின் அன்புக் கணவரும், மணிவண்ணன், தமிழ்ச்செல்வி, ரவிவண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இந்துஜா, கஜன், ஜெயராதிகா ஆகியோரின் மாமனாரும், நிராஜ், கவினயா, டீபிகா, ஹிருத்திக், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், பவளமலர், ஞானகுரு, தவமலர், சிவசோதி அமரர் ரதிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராசலிங்கம், அழகேஸ்வரன், யசோதரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2023) புதன்கிழமை முற்பகல் 11.00மணியளவில் நடைபெற்று, ஈமக்கிரியைகளுக்காக பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விநாயக முதலியார் வீதி,
புலோலி மத்தி, பருத்தித்துறை.
021 226 4758

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 247709) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலனாய்வாளர்கள் - பொலிஸார் அதிகார வரம்பை மீறக்கூடாது

## ஐக்கிய மக்கள் சக்தி காட்டம்

கொழும்பு, ஜூன் 6
நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய புலனாய்வாளர்களும் சட்டம் - ஒழுங்கை காக்க வேண்டிய பொலிஸாரும் தங்கள் அதிகார வரம்பை மீறிச் செயற்படுவது கண்டனத்துக்குரியது - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகளினதும் அவர்களின் ஆதரவாளர்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தவேண்டும்.
மக்களின் தோழனாக இருக்கவேண்டிய பொலிஸார் மக்களையும் அவர்களின் பிரதிநிதிகளையும் ஆயுத முனையில் அச்சுறுத்துவது இந்த நாட்டின் ஜனநாயகத்தை கேள்விக்குட்படுத்துகின்றது. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் அரசு சாக்குப் போக்குக் காரணங்களைக் கூறாமல் உண்மை நிலைவரங்கள் தொடர்பில் ஆராயவேண்டும். குற்றவாளிகள் யாராக இருப்பினும் தண்டிக்கப்படவேண்டும் - என்றார். (அ-ஒ,22)



## வீதி விபத்து குறித்து விழிப்புணர்வு

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி - தர்மபுரம் மத்திய கல்லூரி மாணவர்களுக்கு போக்குவரத்து விதிகள், விழிப்புணர்வு வீதி நாடகம் ஊடாக கடந்த 25ஆம் திகதி வியாழக்கிழமை தெளிவூட்டப்பட்டன. (ய-113)



வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் 73 ஆவது குருதிக்கொடை முகாம் வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் கடந்த 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ய-66)



ஹற்றன் நஷனல் வங்கியின் சமூகம்சார் நலனோம்புத் திட்டத்தின் கீழ் ஆயிரம் கர்ப்பிணிகளுக்கு சத்துணவுப் பொதி வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை வங்கியின் அனைத்துப் பிராந்தியங்களிலும் இடம்பெற்றது. வங்கியின் பத்து பிராந்தியங்களிலிருந்தும் தலா 100 கர்ப்பிணிகள் வீதம் தெரிவு செய்யப்பட்டு சத்துணவுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன. (ச-9)



'ஏழாலை' எனும் கிராமம் உருவாகக் காரணமான ஏழு ஆலயங்களில் ஒன்றான, ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலய மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா வைகாசி விசாக நன்னாளான கடந்த வெள்ளிக்கிழமை நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக நடைபெற்றது. (ம-66)

## மக்கள் பிரதிநிதிகளுக்கு அச்சுறுத்தல்: ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது

### கூறுகிறார் கெஹலிய

கொழும்பு, ஜூன் 6
வடக்கில் மக்கள் பிரதிநிதிகளுக்கு அச்சுறுத்தல் என்று ஊடகங்களில் வெளியான செய்திகள் ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றன என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் சகல இன மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் சுதந்திரமாக நடமாடமுடியும். அந்த நிலைமையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்தநிலையில் வடக்கில் மக்கள் பிரதிநிதிகளுக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் அச்சுறுத்தல் என ஊடகங்களில் வெளிவரும் செய்திகள் வியப்பை ஏற்படுத்துகின்றன. என்ன பிரச்சினை நடந்தாலும் அதற்குத் தீர்வு வழங்க நீதிமன்றம் உண்டு. அதைவிடுத்து எவரும் சட்டத்தைக் கையில் எடுக்கமுடியாது - என்றார். (அ-ஒ,22)

## யாழ். பல்கலை. - வேலூர் பல்கலை. புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்துக்கும், இந்தியாவின் வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்துக்கும் இடையிலான கல்விசார் கூட்டுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.
பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜும் கலந்துகொண்டார்.
வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் சார்பில், கணினி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் பீட, பீடாதிபதி கலாநிதி கே.ரமேஸ் பாபு, பேராசிரியர் பி.சுவர்ணலதா மற்றும் சர்வதேச உறவுகளுக்கான உதவிப் பணிப்பாளர் கலாநிதி ஜே.என்.வி. ரகுராம் ஆகியோர் நிகழ்நிலை வாயிலாக இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.
வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் அதன் சர்வதேச உறவுகளுக்கான அலகின் ஊடாக சர்வதேச ரீதியாக நூற்றுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களுடன் இத்தகைய கூட்டு ஆய்வு மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. இலங்கையில் றுகுணு பல்கலைக்கழகமும் வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்துடன் கூட்டு ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.
நேற்றுக் கைச்சாத்திடப்பட்டுள்ள இந்த உடன்படிக்கைக்கமைய இரண்டு தரப்புகளில் இருந்தும் மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் பரிமாற்றம், கல்வி, ஆய்வு நடவடிக்கைகளில் கூட்டு போன்ற விடயங்கள் கவனம் செலுத்தப்படவுள்ளன. (அ-ஒ,26)



மட்டுவில் வடக்கு சந்திரபுரம் கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழு மற்றும் கிராமிய சிறுவர் கழகம் ஆகியவை இணைந்து நடத்திய குருதிக்கொடை முகாம் கடந்த சனிக்கிழமை மட்டுவில் சந்திரபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.
இதன்போது பிரதேச கிராம அலுவலர், முன்பள்ளி ஆசிரியர்கள், சிறுவர் கழக உறுப்பினர்கள் எனப் பலர் பங்கேற்று குருதிக் கொடை அளித்தனர். (ச-131-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்...

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர், அரசியல் கட்சியொன்றின் பிரதிநிதியாக இருப்பதால் அவரது பிரதிநிதியை நியமிப்பது உள்ளூராட்சி மன்றங்கள் அரசியல்மயமாகுவதற்கு வழி வகுக்கும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக ஏனைய அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு அநீதி இழைக்கப்படும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் பல்வேறு தரப்பினர் தொடர்ச்சியாக முறைப்பாடுகளைச் சமர்ப்பித்துள்ளதாக ஆணைக்குழு கூறியுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் இணைப்பு மற்றும் தேவையான தகவல்களை மாநகர ஆணையாளர் அல்லது அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களின் பிரதேச செயலரிடம் பெற்றுக்கொள்ள முடியும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதற்காக வேறு ஒரு பிரதிநிதியை நியமிக்க வேண்டிய அவசியமில்லை எனவும் தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை - உள்ளூராட்சி மன்றங்களுக்கு விசேட பிரதிநிதிகளை நியமிக்கும் தீர்மானத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி அண்மையில் உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.இ)

## 5 ஆண்டு...

ஊதியம் இல்லாத விடுமுறையுடன் ஐந்து ஆண்டுகள் வெளிநாட்டில் வேலை செய்ய அரசாங்கம் அனுமதித்தது. அரச ஊழியர்கள் நாடு திரும்பியவுடன் அவர்களின் சேவை மூப்பு அல்லது ஓய்வூதிய உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் என்றும் அரசாங்கம் தெரிவித்திருந்தது.

'நிதிச் செலவினங்களைக் குறைப்பதற்கும், அந்நியச் செலாவணி வரவுகளை அதிகரிப்பதற்கும் ஒரு வருடத்துக்கு முன்னர் எடுக்கப்பட்ட இந்த முடிவு விவேகமானதாகத் தோன்றினாலும், நடைமுறையில், இது மிகவும் திறமையான மற்றும் தகுதியான ஊழியர்கள் வெளிநாட்டு வேலைக்காக அரச சேவையை விட்டு வெளியேறுவதற்கு வழிவகுத்தது' என்று ஜயசிங்க சுட்டிக்காட்டினார்.

'இதனால் அரச சேவையில் குறைந்த செயற்றிறன் கொண்ட மற்றும் தகுதி குறைந்த ஊழியர்களே இருக்கமுடியும். இதுவரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச பணியாளர்கள், இந்த விடுமுறையைப் பெறுவதற்குத் தேவையான அனுமதிகளைப் பெற்றுள்ளனர். சிறப்பாக செயற்படும் அதிகளவான அரச ஊழியர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. இது அரச சேவையைப் பலவீனப்படுத்தக்கூடும். இந்தத் தீர்மானத்தை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யக்கூடும்' என ஜயசிங்க மேலும் தெரிவித்தார். (அ-ஒ.இ)

## மக்கள்...

கைது செய்யப்பட்டுள்ளனர். அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை இந்த வழக்கில் குற்றவாளியாகவும் மருதங்கேணி பொலிஸார் பெயரிட்டுள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி மருதங்கேணியில் மக்கள் சந்திப்புக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அரச புலனாய்வாளர்களால் அச்சுறுத்தப்பட்டிருந்தார். அத்துடன் சிவில் உடையில் நின்றிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவராலும் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டதாக அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து கைதுவேட்டையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு மகளிர் அணித் தலைவி சற்குணதேவி ஜெகதீஸ்வரனின் வீட்டுக்கு நேற்றுக் காலை சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்தனர். இரு தினங்களுக்கு முன்னர் அவரது வீட்டுக்கு இரவுவேளை சென்ற இருவர் தம்மை இராணுவப் புலனாய்வாளர்கள் எனத் தெரிவித்து, பொலிஸார் உங்களை விரைவில் கைது செய்வார்கள் என்று கூறியிருந்த நிலையில் இந்தக் கைது நேற்று இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட அவர் கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான மருதங்கேணி பொலிஸ் அதிகாரிகள் உட்பட்ட பத்துக்கு மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் அவருக்கு பிணை வழங்க எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து நாளை வரையில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மற்றொரு உறுப்பினரும் நேற்றுக் கைது செய்யப்பட்டார். வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த உதயசிவம் என்பவரே வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயப் பொங்கல் விழாவில் வைத்துப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.



இதற்கிடையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை மருதங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டுள்ளார். 3ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தில் உங்களை (கஜேந்திரகுமார்) குற்றவாளியாகப் பெயரிட்டுள்ளோம். நீங்கள் மருதங்கேணிக்கு வரமுடியுமா? உங்களை முற்படுத்தவேண்டும் என்று கேட்டுள்ளார். நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்க கொழும்புக்குச் சென்று கொண்டிருப்பதால் எதிர்வரும் திங்கட்கிழமையே வர முடியும் என்றும் சபாநாயகரின் ஆலோசனையைப் பெற்று அதற்கு அமைவாகவே செயற்படுவேன் என்றும் கஜேந்திரகுமார் பதிலளித்துள்ளார். சபாநாயகருடன் தாங்கள் இது தொடர்பில் பேசியுள்ளதாக மருதங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பதிலளித்துள்ளார். சபாநாயகரிடமிருந்து எந்தவொரு அறிவுறுத்தலும் தனக்குக் கிடைக்கவில்லை என்று கஜேந்திரகுமார் குறிப்பிட்டுள்ளார். இதன் பின்னர் சபாநாயகரைத் தொடர்புகொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் முயன்றபோதும் அவர் வெளிநாட்டில் இருப்பதால் அவருக்கு குறுஞ்செய்தி அனுப்பியுள்ளார். பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்சவை தொடர்புகொண்டுள்ளார். மருதங்கேணி பொலிஸார் தன்னுடன் உரையாடியதாகவும் உங்களிடம் (கஜேந்திரகுமார்) வாக்குமூலம் பெறவேண்டும் என்று கூறியதாகவும் பிரதி சபாநாயகர் கஜேந்திரகுமாரிடம் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்பதற்காக கொழும்புக்கு வந்து கொண்டிருப்பதால் திங்கட்கிழமையே தன்னால் செல்ல முடியும் என்றும் சபாநாயகரின் ஆலோசனையைப் பெற்று செயற்பட எதிர்பார்த்துள்ளதாகவும் கஜேந்திரகுமார் பிரதி சபாநாயகரிடம் தெரிவித்துள்ளார். அதனை ஏற்றுக்கொண்ட பிரதி சபாநாயகர், சபாநாயகரின் ஆலோசனையுடன் செயற்படுமாறு கூறியுள்ளார். இதனை மருதங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கஜேந்திரகுமார் தெரியப்படுத்தியபோது அதனை ஏற்றுக்கொண்டதுடன் விரைவில் இந்த வழக்கை முடிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இந்தத் தகவலை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரும் 'உதயனுக்கு' உறுதிப்படுத்தினார். (அ-ஒ.5,26,27,19,66,113)

## கேணியில்...

(வயது - 22) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

ஆலயத் திருவிழாவுக்காக திருகோணமலை மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞர்கள் வல்வெட்டித்துறையில் வந்து தங்கி நின்றுள்ளனர். நேற்றுமுன்தினம் ஆலய தீர்த்தத் திருவிழா முடிவடைந்த பின்னர் மூன்று இளைஞர்கள் கேணியில் குளித்துள்ளனர். இதன் போதே மேற்படி இளைஞர் மூழ்கி உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணையை வல்வெட்டித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ச.சிவராஜா மேற்கொண்டார். (அ-ஒ.26)

## புதையல் தோண்ட...

யும் கைது செய்துள்ளதுடன் தோண்டுவதற்குப் பயன்படுத்திய ஸ்கானர் இயந்திரம் உள்ளிட்ட பொருள்களும் மீட்கப்பட்டன.

முள்ளியவளை, கணுக்கேணியைச் சேர்ந்த ஒருவரும் பூதன்வயலைச் சேர்ந்த ஒருவரும் தென்பகுதியைச் சேர்ந்த 6 பேருமாக 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். முல்லைத்தீவில் பணியாற்றும் சிப்பாயும் இதில் உள்ளடங்கியுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களையும் சான்றுப் பொருள்களையும் சிறப்பு அதிரடிப் படையினர் முள்ளியவளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (அ-ஒ.19)

## கைக்குண்டுடன்...

சத்தமாக தகாத வார்த்தைகளால் பேசியுள்ளார். அவரது அட்டகாசத்தைப் பொறுக்க முடியாத அயலவர்கள் பொலிஸ் அவசர அழைப்புக்கு முறையிட்டுள்ளனர்.

அங்கு சென்ற பொலிஸார், அவரது வீட்டுக்குள் சென்று சந்தேகநபரைத் தேடியுள்ளனர். அப்போது வீட்டினுள்ளிருந்து கைக்குண்டையும் மீட்டதுடன் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர். (அ-ஒ.ரி2,20,23)

## மேல்...

வழங்கப்பட்டுள்ளது. அவருக்கான மேல் நீதிமன்றத்தை நீதிச் சேவை ஆணைக்குழு விரைவில் ஒதுக்கீடு செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.இ)

## ஆண்டவர்...

டத்தொகுதியும் விஷமிகளால் முற்றாக அடித்து சேதப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-ஒ.இ)



## வற்றாப்பளை...

மற்றும் பேர்ஸ்களைத் திருடியுள்ளனர். நேற்று மாலை வரையில் 17 நகைத் திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருந்தன. இதேவேளை - பக்தர்களால் தவறவிடப்பட்ட கைப்பை மற்றும் நகை என்பனவும் கண்டெடுக்கப்பட்டு ஆலய நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டும் இருந்தன. (அ-ஒ.19)

## வற்றாப்பளை அம்மன்...

காலைப் பூசையில் அதிகளவான பக்தர்கள் கலந்துகொண்டதுடன் தூக்குக் காவடி, பறவைக் காவடி, பாற்செம்பு, தீச்சட்டி உள்ளிட்ட நேர்த்திக்கடன்களை மக்கள் மேற்கொண்டனர். இரவு வழிபாடுகளிலும் பெருமளவு பக்தர்கள் பங்கேற்றனர்.

கடந்த ஆண்டுகளில் ஆலயத்துக்கு பக்தர்கள் வருகை தருவதில் சிக்கல் நிலைமைகள் இருந்த நிலையில் இம்முறை அதிகளவான பக்தர்கள் கலந்துகொண்டு நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (அ-ஒ.113)


### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு.

* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை 120,000/= மட்டும்.

தொடர்பு: 076 733 6047, 076 7558 606.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சடலங்களை பொறுப்பேற்குக

உரிமை கோரப்படாத சடலங்களை அடையாளம் காட்டி உரியவர்களைப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் சி.எஸ்.யமுனானந்தா கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த மாதம் 13ஆம் திகதி ஊர்காவற்றுறை பொலிஸாரால் 3ஆம் வட்டாரம் அல்லைப்பிட்டியிலிருந்து கொண்டு வரப்பட்ட அடையாளம் தெரியாத சடலமும், கடந்த முதலாம் திகதி கொடிகாமம் பொலிஸாரால் கொண்டுவரப்பட்ட அடையாளம் தெரியாத சடலமும் யாழ். போதனா மருத்துவமனையில் இதுவரை யாரும் உரிமை கோரப்படாத நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அந்தச் சடலங்களை உரியவர்கள் முன்வந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ய)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் மகாலிங்கசிவம்



வசாவிளானைப் பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மகாலிங்கசிவம் நேற்று (05.06.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரனார் (பண்டிதர்) - பார்வதியம்மா அவர்களின் அன்பு மருமகனும், மாதினி அவர்களின் அன்புக் கணவரும், செந்தில்ரூபன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - ஆளுநர் செயலகம், வடக்கு மாகாணம்), தட்சாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நடேசலிங்கம், இலங்கைநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மதிவாணன், விஜயலட்சுமி, காலஞ்சென்ற ஆறுமுகசிவம் மற்றும் இளவழகன், காலஞ் சென்ற சேந்தன் மற்றும் நளினி, குமுதினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (06.06.2023) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோவில் வீதி,
புத்தூர் மேற்கு, புத்தூர்.

(CS/50715)AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 37 வயதுடைய தனியார் துறையில் உயர் பதவி வகிக்கும் 7இல் செவ்வாய் உடைய மணமகனிற்கு உயர் தகைமை யுடைய மணமகள் தேவை. மணமகனின் கிரக பாவம் 46. பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும். தரகர் தவிர்க்கப் படுகின்றனர்.

தொடர்புகளுக்கு: 076 292 1169

## தையல் நிலையத்துக்கு வேலையாள் தேவை

யாழில் இயங்கும் தையலகத்துக்கு **கட்டிங் மற்றும் தைக்கத் தெரிந்த** ஊழியர் தேவை.
(ஆண், பெண் இருபாலாரும்)

076 162 9517
077 334 7766

(CR/50713)AH-1

## Wanted Shop for Rent / Lease

நல்லூரடி, பலாலி வீதி அல்லது யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டுப் பிரயாணிகள் சஞ்சரிக்கும் பகுதிகளில் புடைவை வியாபாரத்துக்கு உகந்த வியாபார நிலையம் வாடகைக்குத் தேவை.

077 827 0309

(CR/50719)AH-1

## வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவில், கோண்டாவில் அல்லது அவ்விடத்தை அண்மித்த பகுதிகளில் 3 பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத்தேவை.

077 344 6026

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 02 . 1932



மறைவு 02 . 06 . 2023

### சுந்தரம் இராசரத்தினம்

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் இராசரத்தினம் கடந்த (02.06.2023) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - கற்பகம் தம்பதிகளின் அன்பு மகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னப்பொடி - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும், சிவகௌரி, சிவகுமார் (ஜேர்மனி), திருக்குமரன் (பிரான்ஸ்), இராஜகௌரி (பிரான்ஸ்), ஞானகௌரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லம், சின்னத்தங்கம், மாமாங்கம், பாக்கியம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெகநாதன் (பாபு - இலங்கை மின்சாரசபை ஓய்வூதியர்), அனுஷியா, சரணியா, ராஜ்கண்ணன், பாலமுரளி ஆகியோரின் மாமனாரும், கஜானனி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலயக்கல்வி அலுவலகம் - மன்னார்), பிரசன்னா, மயூரன், கலைவாணி, திவாணி, லாவன்யா, துஷ்யந்தன், சௌமியா, அஸ்வினி, துஷாந், அபிசன், மீனுஜா, கிஷாந், கஜிந், அஜந், தனுஷாந்தி, பிரவீணன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாபு (மருமகன்) - 077 123 4619
கௌரி (மகள்) - 077 280 5609

(CS/50717)AH-1

தகவல் :
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சுப்பிரமணியம் ஏகாம்பரநாதன்

தோற்றம்
01.03.1942



மறைவு
18.05.2022

திதி:-
அபரபட்ச திருதியை

மின்னிமுழங்குவதுபோல் கணப்பொழுதில்
நிகழ்ந்துவிட்ட உங்கள் பிரிவு ஏன் இத்தனை
அவசரமாய் யார் அழைத்து எங்கு சென்றீர்கள்?
அப்பா... ஓராண்டு ஆனபோதும் திரும்பிவர
மாட்டீர்களா என்று ஏங்கித் தவிக்கின்றோம்.

முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை.

(CS/50705)AH-1

குடும்பத்தினர்.

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக"

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 12 . 06 . 1950



ஆண்டவர் அடியில் 05 . 06 . 2023

### திருமதி லோகேஸ்வரி - பரராஜசிங்கம் (யோகம்)

வீமன்காமம் - தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் காமாட்சியம்மன் கோவிலடி, நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரி பரராஜசிங்கம் அவர்கள் நேற்று (05.06.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தர்மலிங்கம் - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், பரராஜசிங்கம் (சமாதான நீதிவான், ஸ்ரீஅம்பாள் ரேட்ஸ், சுன்னாகம், அம்பாள் ஹாட்வெயர்ஸ், நீர்வேலி, முன்னாள் உரிமையார்) அவர்களின் பிரிய பத்தினியும், தர்மகுமாரன் (போதனாசிரியர், தொழில்நுட்பக் கல்லூரி, மன்னார்), தர்மசங்கரன் (யாழ்ப்பாணம் மாநகரசபை), தர்மரூபன் (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீபிரியா (நல்லூர் பிரதேச சபை), வாலாம்பிகை (IT Park), சாருஜா (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நேருக்சன், சிஜிசன், வைஷ்சகி, கேசிகன், பராபரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், செல்வரட்ணம், கமலேஸ்வரி (அமரர்) மற்றும் முத்துலிங்கம், மகேஸ்வரி (கனடா), அமரர் கமலாதேவி, அமரர் பத்மநாதன், உருக்குமணி, செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி வடக்கு, சிவியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு.
021 205 4822, 0777 060 502.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25152) A-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.